தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1978 பிப்ரவரி 28.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்

பிளவுக்கல் அணை

* 301 வினா—திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலுகாவில் சிற்றாற்றுக்கு குறுக்கே பிளவுக்கல் அணை கட்டியதால் ஏற்கனவே அந்த ஆற்றின் மூலம் பாசன வசதி பெற்றிருந்த கோவனேரி போன்ற கண்மாய் பாசனம் பாதிக்கப்பட்டுள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அந்த நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்வதற்கு ஏதாவது திட்டம் உள்ளதா ? அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மைக்குத் தரையடித் தண்ணீர்

* 302 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டத்தில் தரையடித் தண்ணீரை வேளாண்மைக்குப் பயன்படுத்திட அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அவையின் முன் விவர அறிக்கை * வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் நிலத்தடி நீரை பயன்படுத்தி அங்கே அருகாமையில் உள்ள பகுதிகளுக்கு பாசனம் அளிப்பதற்கு அங்குள்ள திட்டங்களை

** 130-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

[1978 பிப்ரவரி 28

விரிவுபடுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். அதற்கான விவரங்களை அறிவிக்க இயலுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : காவிரி பாய்கிற தஞ்சை மாவட்டத்தில் நிலத்தடி நீரை ஓரளவுக்குத்தான் பயன்படுத்த முடியும் என்ற அடிப்படையில் இந்த நிலத்தடி நீர் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கர்நாடக மாநில அரசு கூட அந்த நிலத்தடி நீரை பயன்படுத்தலாமே என்று குறிப்பிட்டார்கள். மேட்டூர் நீர்த் தேக்கத்திலேயிருந்து தண்ணீர் திறந்து விடுகிறபோதுதான் தஞ்சை மாவட்டத்தில் நிலத்தடி நீர் கிடைக்கிறது என்பது தொழில் நுட்ப வல்லுநர்களின் கருத்து. ஆகவே ஓரளவுக்குத்தான் அந்த நிலத்தடி நீரைப் பயன்படுத்த முடியும்.

திரு. என். கிட்டப்பா : குறிப்பாக அமெரிக்காவின் துணை கொண்டு தஞ்சை மாவட்டத்தில் இதற்கு முன்னாலேயே ஆர்ட்டீஷியன் கிணறுகள் சில இடங்களில் இயங்கி வருகின்றன. இந்த ஆர்ட்டீஷியன் கிணறுகளை இன்னும் அதிகமான இடங்களில் ஏற்படுத்த அரசு ஏதேனும் முயற்சிகளை மேற் கொள்ள முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அமெரிக்க ஐக்கிய நாடுகள் வளர்ச்சி திட்டத்தின்கீழ் காவிரியாறு கழிமுகப் பகுதி ஆய்வு செய்யப்பட்டு அக்விஃபயர்—நிலத்தடி நீர் தங்கிகள் எந்த அளவுக்கு கீழே இருக்கிறது என்று பார்த்து எவ்வளவு தண்ணீர் இருக்கிறது என்றும் கணக்கெடுத்திருக்கிறார்கள். அந்த நிலத்தடி நீர் தங்கிகள் காவிரியாற்றிலே இருந்து வருகிற தண்ணீரே ஒழிய வேறெல்ல. ஆகையினால் காவிரியாற்று நீரோட்டத்தைப் பொறுத்த அளவில் தான், நிலத்தடி நீர் பயன்படுத்தப்படும் என்ற அளவுக்கு நிலைமை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. இளங்கோவன் : தஞ்சை மாவட்டத்தில் மின் இணைப்பு கொடுத்த அதே நேரத்தில் அரசின் கணக்கில் உள்ள பம்ப் செட்டுகள் எத்தனை என்று அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால் அது பற்றி பதிலளிக்க முடியும். தஞ்சை மாவட்டத்தில் ஆண்டுக்கு 1,200 கிணறுகளுக்கு மின்சாரத்தை வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மின்சாரம் கோரி வந்துள்ள மனுக்களின் எண்ணிக்கை 3,721.

1978 பிப்ரவரி 28]

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : தஞ்சை மாவட்டத்திலே காவிரி ஆறு பாய்கின்றது. காவிரித் தண்ணீரை வைத்துத்தான் அங்கே ஊற்றுத் தண்ணீர் கிடைக்கிறது என்று அமைச்சரவர்கள் கூறுகிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்திலே அந்த ஓரத்திலே இருக்கிற இடத்திலே எல்லாம் ஏராளமான ஆர்ட்டீஷியன் ஊற்றுகள் இருக்கின்றன. அதைப் பயன்படுத்தி இராமநாதபுரம் மாவட்டம் முழுவதும் நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதற்கு ஏற்பாடு செய்ய மத்திய அரசை அணுகி மாநில அரசு செய்து கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்ற கருத்தை ஆராய்ந்து அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செள. வே. வரதராஜன் : இந்தச் சிறிய விவசாயிகள் அதாவது பத்து ஏக்கா வரையில் வைத்திருக்கக் கூடிய விவசாயிகள் நிலத்தடி நீரை உபயோகப்படுத்தும் முறையில் சமுதாய ரீதியில் குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கு அரசு ஆராயுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இது பற்றி வரவு-செலவுத் திட்டத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

திரு. ஓ. சுப்பிரமணியம் : நிலத்தடி நீர் இந்த மாநிலம் முழுவதும் எங்கெங்கு கிடைக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்பதைப் பற்றிய விரிவான அறிக்கையை க்ரவுண்ட் வாட்டர் ஸெல்காரர்கள் கொடுத்திருக்கிறார்களா ? அந்த விவரங்களைச் சொல்வதற்கு இயலுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கிட்டதட்ட 90 பங்கு முடிந்து விட்டது. அந்த அறிக்கை தரப்பட்டிருக்கிறது. தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் தர முடியும்.

திரு. ரா. மார்க்கபந்து : பொதுவாக நிலத்தடி நீர் இல்லை என்ற ஒரே ஒரு காரணத்தைக் காட்டி பம்ப் செட்களுக்கு மின் இணைப்புக் கேட்கிற யாருக்கும் மின் இணைப்புக் கிடைக்க முடியாத ஒரு நிலை இப்போது இருந்து கொண்டிருக்கிறது. அதைத் தீர்த்து, பம்ப் செட்களுக்கு இணைப்பு வேண்டுமென்று கேட்கிறவர்களுக்கு இணைப்பு கொடுக்க மாற்றுத் திட்டம் ஏதாவது அரசாங்கத்தின் குறிப்பில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தனிக் கேள்வி போடவும்.

திரு. கே. சௌந்திரராசன் : தமிழ்நாட்டில் அண்மையில் ஏற்பட்ட மழை, வெள்ளத்தின் விளைவாக நிலத்தடி நீர் வளம் பெருகியிருப்பதாகச் சொல்கிறார்கள். இதை அடிப்படையாக வைத்தாவது புதிதாக பம்ப் செட்களுக்கு மின்சாரம் வழங்கும் நிலை ஏற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 35,000 பம்ப் செட்களுக்கு வழங்குவது என்று தீர்மானித்துள்ளோம். அவைகளைப் பொறுத்த வரையில் இந்த நிலத்தடி சான்றிதழ் தேவைப்படாது.

ராஜா தோப்பில் அணை கட்டும் திட்டம்

* 303 வினா—திரு. துரை முருகன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வடாற்காடு மாவட்டம், குடியாத்தம் வட்டம், லத்தேரிக்கருகில் ராஜா தோப்பில் அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனின், அத் திட்டம் எப்பொழுது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) பரிசீலனை முடிந்த பிறகுதான் எப்பொழுது துவக்குவது என்பதற்கான முடிவு எடுக்க இயலும்.

திரு. துரை முருகன் : இந்த அணை கட்டுவதற்கு 1974-ல் அரசாங்கச் சார்பில் பொதுப்பணித்துறை சீஃப் என்ஜினீயர் அவர்கள் எல்லாம் அந்த இடத்திற்கு வந்து அது குறித்து ஆய்வு செய்து ரிப்போர்ட் கூடத் தயார் செய்திருந்தார்கள். அப்போது நான் காட்பாடி எம்.எல்.ஏ. ஆக இருந்தேன். அந்த ஆண்டே அதைத் துவக்குவதாக எனக்கு அறிவிக்கப்பட்டது. கிட்டத்தட்ட ஐந்து ஏரிகளுக்கு ஆண்டு முழுவதும் நீர் வருகிற ஒரு வாய்ப்பு இந்த அணைக்கட்டுத் திட்டத்தினால் ஏற்படும். கிட்டத்தட்ட 500 ஏக்கர் புன்செய் நிலங்கள் நன்செய்யாக மாற வாய்ப்பிருக்கிறது. ஆகவே, இதன் அத்தியாவசியத்தை உணர்ந்து உடனடியாக இந்த ஆண்டே அதைத் துவக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அறிவித்ததில் ஒன்றும் தவறு இல்லை. அதனால்தான் ஆய்வில் இருக்கிறது.